# இலக்கியங்கள் செப்பும் கூத்துக்கலை

*பொ. தினேஷ்குமார்*
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவன், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783339

**ஆய்வுச் சுருக்கம்**

*இயல் இசை நாடகம் மூன்றும் சேர்ந்த தமிழை முத்தமிழ் என்கிறோம் நாடகம் என நாம் கூறுவதை பழந்தமிழ் கூத்து (ஒழிப்பு உதவி தகவல்) என்று வழங்கப்படுகிறது. கூத்து ஆடுவோர் கூத்தர் எனப்பட்டனர். கூத்து அகக்கூத்து புறக்பட்டது என இரு வகைப்படும். அகக்கூத்து என்பது வீட்டுக்குள் ஆடப்படும் வரிக்கூத்து புறக்கூத்து பொதுமக்கள் முன்னிலையில் நடைபெறுவது.*

*சங்க காலத்தில் மூன்று வகையான கூத்துகள் நிகழ்ந்துள்ளன. குரவை தழுவுபினை என்பன அவை தெய்வ ஆடல்கள் பதினொன்றும் கூத்தின் வகைகளே. கூத்தினை உணர்த்தும் சொற்கள் பல கூத்துக்களை, துணங்கைக்குத்து வெறியாடு குரவைக்கூத்து கூத்துக்களையும் புறமும் கூத்தும் காதலும் போன்ற கலைகளைப் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

## முன்னுரை

*சங்க காலங்களில் இருந்து வாழ்ந்து வந்த மனிதர்கள் விளையாட்டுக்காகவும், பொழுது போக்கிற்காகவும் அறிவு சார்ந்த காரணங்களாலும் அவர்கள் கலையில் ஈடுபடுத்திக் கொண்டனர் இக்கூத்துக் கலையில் மக்கள், மன்னர்கள், புலவர்கள் என்று அனைவரும் பங்கு பெற்றனர். விரலியர் வயிறியர் கோடியர் கண்ணுளர் ஆரியர் என்று கூத்தர்களை இலக்கியங்கள் காட்டுகின்றன. கூத்துக்களைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.*

## கூத்து

*மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு நிகழ்ச்சி கூத்து ஆகும். சங்க காலங்களில் வாழ்ந்த மக்கள் விடியற்காலையில் எழுந்து வயலுக்குச் சென்று வேலைகளை செய்து மாலையில் வீடு திரும்பும் போது அவர்களுக்கு உடல் அசதியோடும் மனச்சுமையும் இருக்கும். அப்போது அவர்கள் சந்தோஷத்தில் இருக்க வேண்டி பாடலை பாடியும், தங்கள் கைகளை தட்டி இசையினை எழுப்பியும், அதனோடு நடனம் ஆடியும், தான் மட்டும் சந்தோசம் அடையாமல் தன்னை பிற மக்களையும் மகிழ்ச்சிப்படுத்தினஏ. இசையோடு சேர்ந்து ஒரு நடிப்புக்கலையே கூத்துக்களை ஆகும்.*

## துணங்கை கூத்து

*கூத்து வகைகளில் ஒன்று துணங்கை கூத்தாகும். இக்கூத்து அதிக போர் செய்திகளை எடுத்துரைக்க பயன்பட்டது. பெண்களுடன் பெண் வேடமிட்டு தலைவன் ஆடுகின்றான் என்றும், அதன் பிறகு துணங்கக் கூத்து ஆடியவுடன் ஆண் என தெரிந்தது. அப்போது தலைவனின் ஆடை கிழிந்து போனதும் கலித்தொகையில் 73 ஆம் பாடல் குறிப்பிடுகிறது.*

***என்னை நீ செய்யணும், உரைத்தீவார்***
***இல் வழி,***
***முன்அடிப் பணிந்து எம்மை உணர்த்திய***
***வருதிமன் நிறை தொடி நல்லவர் துணைங்கையுள்***
***தலை கொள்ள.***[1]

*என்ற பாடல் வரி துணங்கை கூத்து பற்றி குறிப்பிடுகிறது*

## வெறியாடு

*கூத்துக் கலைகளில் ஒன்றான வெறியாடு என்பது பெண்களுக்காக நிகழ்த்தப்படுகின்றன*

என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. வெறியாட்டு என்பது ஒரு பெண்ணுக்கு பேய் பிடித்து விட்டதாக நினைத்து வெறியாட்டு நடத்தப்படுவது ஆகும். தலைவன் தலைவரிடம் விரைவில் வருவேன் என்று கூறிவிட்டு சென்றான் தலைவி அவன் மேல் கொண்ட காதலால் இவள் உடல் மெலிந்து, உணவு உண்ணாமல் அவனையே நினைத்து உருகுகின்றாள் எந்த பொருளை பார்த்தாலும் தலைவனின் முகமே தெரிகின்றது, எனவே காதல் நோயால் வாடும் தலைவியின் நிலையை தவறாக எண்ணி நற்றாயும், செவிலி தாயும் வெறியாட்டு நடத்த நினைக்கின்றனர் என்பதை,

**கிழவோன் அறியா அறிவினால் இவள் என**
**மையரு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்**
**ஐயக்கிழவி அறிதலும் உரித்தே.[2]**

என்ற தொல்காப்பிய வரிகள் மெய்ப்பிக்கின்றன.

## குரவைக்கூத்து

குரவைக்கூத்து என்பது கூத்தின் ஒரு வகையாகும் போர் நிகழும் காலத்திலும் எவையேனும் தீங்கு நிகழுமோ என்ற அச்சம் அலை கழிக்கும் வேலையிலும் பொழுது போக்கிற்காகவும் குறவை கூத்து ஆடப்பட்டவை மக்களின் பொழுது போக்கிற்காக ஆடப்படும் கூத்தில் இதுவும் ஒன்று இதனை வெற்றியாடல் என்ற பெயரும் பிற்காலத்தில் அழைக்கப்பட்டது குறவை கூத்தினை கலித்தொகையில்,

**குறவை தழீஇ யாம், மரபுளி**
**பாடி தேயா வழுப் புகழ்த் தெய்வப் பரவுவதும்[3]**

என்னும் வரிகளில் ஏற்றினை அடக்கிய தலைவனும் கலந்துகொண்டு கூடியிருந்தவர் மகிழும்படி ஆடியதை அறிய முடிகிறது.

**மதுரைக்காஞ்சியில்**
**விழவு நின்ற வியன் மருகில்**
**நுணங்கையந் தழுவுளின்**
**மணங்கமழ் சேரி..4**

## கூத்துக்கலையும் புறமும்

பழங்காலத்தில் போர்க்களங்களில் வீரர்களை ஊக்குப்படுத்தவும் எழுச்சி ப்படுத்தவும் கூத்துகள் நடத்தப்பட்டன. இதில் முன்தேர்குரவை பின்தேர்குரவை என இரண்டு வகைப்படும். இதனை, தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்கள் சுட்டுகின்றன. பதிற்றுப்பத்தில் கூட,

**குருதி**
**பனிற்றும் புலகளத் தோணே**
**துணைவகை ஆடிய வளம்படு கோமான்[5]**

என்ற வரிகள் துணங்கை கூத்து போர்க்காலங்களில் நிகழ்த்தப்பட்டதை உறுதி செய்கின்றன.

## கூத்தும் காதலும்

காதலர்கள் சந்தித்துக் கொள்ளவும் குறியிடம் குறிப்பிடுவதற்கும், தங்களின் மகிழ்ச்சியினை வெளிப்படுத்துவதற்கும் இக்கூத்துக்களை களமாக விளங்கியுள்ளது. கலித்தொகையில்,

**தொழீஇ ஒருக்கு நாம் ஆகும் குரவையுள்**
**நம்மை அரக்கினால் போல்**
**நோக்கி அல்லல் நோய் செய்தல்[6]**

என்ற வரிகளில் மகளிர் குரவைக்கூத்து நிகழ்த்தியதை காண முடிகிறது. இக்கூத்தில் தலைவி தோழியோடு ஆடியதையும் அப்போது தலைவன் தலைவியைக் காண வருவதையும், அவர்களிடையே காதல் மலர்வதையும் பாடல் ஆசிரியர் சுட்டுகிறார்.

## முடிவுரை

இன்றைய காலகட்டங்களில் விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ந்து இருப்பினும், துன்பப் பட்ட மக்களுக்கு ஆடலும் பாடலும் தான் எப்போதும் புத்துணர்வை தருகின்றன. தற்போது இருக்கின்ற காலகட்டங்களில் திரைப்படம், இணையம் என்று இவற்றின் தொடர்பால் பல கலைகள் வழக்கிலிருந்து போய் விட்டன. ஆனாலும் இன்றைக்கும் கிராமங்களில் நடைபெறவிருக்கும் திருவிழாக்களின் போது இக்கலைகளை ஒரு சில இடங்களில் காண முடியும்.

## சான்றெண் விளக்கம்

1. விசுவநாதன். அ. முனைவர் (உ.ஆ) கலித்தொகை, பா.73, ப.311.

2. திருஞானசம்பந்தம். ச. முனைவர் (உ.ஆ), தொல். பொ. களவ, நூ.115, ப.139.
3. விசுவநாதன். அ. முனைவர் (உ.ஆ), கலித்தொகை, பா.103, ப.453.
4. நாகராசன். வி. முனைவர் (உ.ஆ), மதுரைக்காஞ்சி, பா.வ. 328-329, ப.13.
5. சுப்பிரமணியன் ச. வே. அறிஞர், எட்டுத்தொகை, பா.57.
6. விசுவநாதன். அ முனைவர் (உ.ஆ), கலித்தொகை, பா.104. ப.462.

**துணை நூற்பட்டியல்**


1. விசுவநாதன்.அ.முனைவர் (உ.ஆ) - கலித்தொகை நியூசெங்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 600 098.
2. திருஞானசம்பந்தம்.ச.முனைவர் (உ.ஆ)- தொல்காப்பியம் பொருளதிகாரம் கதிர் பதிப்பகம், 93, தெற்கு வீதி திருவையாறு - 613204.
3. நாகராசன். வி. முனைவர் (உ.ஆ) - பத்துப்பாட்டு, மதுரைகாஞ்சி நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
4. சுப்பிரமணியன் ச.வே . அறிஞர் - எட்டுத்தொகை மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.